பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 11 2017 7 15
செவ்வாய்க்கிழமை காலை

ஆகாசவாணி-

தலைப்புச்செய்திகள்

1. குஜராத்தில் 89 தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள முதல் கட்ட தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இன்றுடன் முடிவடைகிறது. காங்கிரஸ் கட்சி 13 வேட்பாளர்களைக் கொண்ட இரண்டாவது பட்டியலை வெளியிட்டுள்ளது.

2. ஜிஎஸ்டி வரிக்குறைப்பால் ஏற்படும் பயன்களை நுகர்வோருக்கு வழங்குமாறு நுகர்பொருள் உற்பத்தி நிறுவனங்களை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

3. சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியாக இந்தியாவின் தல்வீர் பண்டாரி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

4. குவஹாத்தியில் நடைபெறும் உலக மகளிர் ஜூனியர் குத்துச்சண்டை போட்டிகளின் வெவ்வேறு எடைப்பிரிவுகளில் இந்தியாவைச்சேர்ந்த ஐந்து வீராங்கனைகள் இன்று பங்கேற்கின்றனர்.

--இனி விரிவான செய்திகள்

<<<<<<<>>>>>>>>

சட்டப்பேரவைக்கு வரும் ஒன்பதாம் தேதி நடைபெறவுள்ள முதல் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று முடிவடைகிறது,

89 தொகுதிகளுக்கு நடைபெறும் இந்த தேர்தலில் போட்டியிட நேற்று மட்டும் 377 வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

இதற்கிடையே, அடுத்த மாதம் 14-ம் தேதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட தேர்தலுக்கான அறிவிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

இந்த அறிவிக்கையை தொடர்ந்து, 93 தொகுதிகளுக்கான தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் தொடங்கியது. வேட்பு மனு தாக்குதலுக்கு இம்மாதம் 27-ம் தேதி கடைசிநாள்.

28-ம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ள இம்மாதம் 30-ம் தேதி கடைசி நாளாகும்.

இதனிடையே, பிஜேபி சார்பில் போட்டியிடும் 28 வேட்பாளர்களின் பெயர்கள் கொண்ட மூன்றாவது பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

மொத்தம் 182 தொகுதிகளைக் கொண்ட குஜராத் சட்டப்பேரவைக்கு, இதுவரை பிஜேபி 134 வேட்பாளர்கள் பெயர்களை அறிவித்துள்ளது.

காங்கிரஸ் சார்பில், 77 வேட்பாளர்கள் கொண்ட முதல் பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

13 வேட்பாளர்கள் கொண்ட 2ஆவது பட்டியலை அந்த கட்சி தற்போது வெளியிட்டுள்ளது.

182 இடங்களைக்கொண்ட குஜராத் சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 18ஆம் தேதி நடைபெறும்.

<<<<<<<>>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பால் ஏற்படும் பலன்களை நுகர்வோருக்கு வழங்க தொழில்நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்று மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டின் மிக முக்கிய நுகர் பொருள் உற்பத்தி நிறுவனங்களுக்கு கலால் மற்றும் சுங்க வரி விதிப்புக்கான மத்திய வாரியம் இதுகுறித்த கடிதத்தை அனுப்பியுள்ளது.

பல்வேறு பொருட்களுக்கு ஜிஎஸ்டிவரி குறைக்கப்பட்டுள்ளதால், உற்பத்தி பொருட்களின் அதிகபட்ச விலையை நிறுவனங்கள் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த வாரியத்தின் தலைவர் திருமதி வனஜா சர்னா அந்த கடிதத்தின் வாயிலாக வலியுறுத்தியுள்ளார்.

ஜிஎஸ்டி வரிகுறைப்பின் பலன்கள் நுகர்வோரை சென்றடைய வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த பத்தாம் தேதி 178 பொருட்களுக்கு ஜிஎஸ்டி வரி குறைக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

<<<<<<<>>>>>>>>

குடியரசுத்தலைவர் திரு ராம்நாத்கோவிந்த் மணிப்பூர் தலைநகர் இம்ப்பாலில் மணிப்பூர் சாங்காய் விழாவை இன்று தொடங்கி வைக்கிறார்.

அரண்மனை வளாகத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் தென்கிழக்காசிய நாடுகளின் தூதர்கள் உட்பட ஏராளமான வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.,

பத்து நாட்கள் நடைபெறும் இந்த விழாவின் ஒரு பகுதியாக, வடகிழக்கு மேம்பாட்டு உச்சிமாநாட்டையும் குடியரசுத்தலைவர் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த உச்சிமாநாடு இரண்டு நாட்கள் நடைபெறும். பன்னாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதில் பங்கேற் உள்ளனர்,

மணிப்பூரில் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் 20 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளது என்று மாநிலத்தின் உள்கட்டமைப்பு வளர்ச்சி முகமையின் துணைத்தலைவர் திரு.மொய்ராங்தெம் அஸ்னி குமார் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>>

நடப்பு நிதியாண்டில் பொதுத்துறை வங்கியின் பங்கு விற்பனை மூலம் 52 ஆயிரத்து 500 கோடி ரூபாய் திரட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது,

முதலீடு மற்றும் பொது சொத்து பராமரிப்புத்துறை செயலர் திரு நீரஜ் குப்தா இந்த தகவலை நேற்று வெளியிட்டார்.

பாரத்-22 என்னும் வர்த்தக பரிமாற்ற நிதி திட்டத்தின்கீழ் 14 ஆயிரத்து 500 கோடி ரூபாயை அரசு பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏலத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் உட்பட் இந்தியாவைச்சேர்ந்த நிறுவனங்கள் பலவும் கலந்து கொண்டன.

நடப்பு நிதியாண்டில் பங்கு விற்பனை மூலம் 72 ஆயிரத்து 500 கோடி ரூபாய் திரட்ட அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

<<<<<<<>>>>>>>>

கடல் கவசம் எனப்படும் மூன்று நாள் கடலோர பாதுகாப்பு பயிற்சி கேரளா மற்றும் லட்சத்தீவுகளில் இன்று தொடங்கப்படுகிறது.

கடலோர பாதுகாப்பை ஆய்வு செய்யும் வகையில், ஆண்டுக்கு இருமுறை இந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் கொச்சியில் நேற்று தெரிவித்தார்,

இந்திய கடற்படை கடலோர காவல் துறை, காவல்துறையின் சிறப்பு பிரிவு, புலனாய்வு பிரிவு, சுங்கத்துறை, துறைமுகத்துறை, மீன்வளத்தறை உள்ளிட்டவை பங்கேற்கும் இந்த பயிற்சியை கடலோர காவல்படை ஒருங்கிணைத்து செயல்படுத்த உள்ளது. இதில் மீனவர்களின் படகுகளும், இலகுரக கப்பல்களும் கலந்து கொள்ளும்,

<<<<<<<>>>>>>>>

சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக இந்தியாவின் திரு. தல்வீர் பண்டாரி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதற்காக நடந்த தேர்தலில் பிரிட்டன் கடைசி நேரத்தில் தனது நியமனத்தை விலக்கிக்கொண்டது. இதன் மூலம் திரு பண்டாரிக்கு ஐ நா பொதுச்சபையின் 193 வாக்குகளில் 183 வாக்குகள் கிடைத்தன.

இதனால் அவர் சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக மீண்டும் தேர்வு பெற்றுள்ளார், 1946ஆம் ஆண்டு சர்வதேச நீதிமன்றம் அமைக்கப்பட்டதிலிருந்து இதுவரை பிரிட்டனைச்சேர்ந்த எந்த நீதிபதியும் அதில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<<>>>>>>>>

திமுக சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால்தான் ஆர் கே நகர் தொகுதி இடைத்தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட முடியவில்லை என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

போலி வாக்காளர்களை நீக்கும் வரை இத்தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தக்கூடாது என்று திமுக அமைப்புச் செயலாளர் திரு. ஆர்.எஸ்.பாரதியும் இடைத்தேர்தலின்போது பணப்பட்டுவாடா செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திமுக வேட்பாளர் திரு.மருதுகணேஷும் தாக்கல் செய்துள்ள மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தலைமை நீதிபதி அமர்வு முன்பு தேர்தல் ஆணையம் நேற்று வலியுறுத்தியது.

தேர்தல் ஆணையத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் இரு வழக்குகளும் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்தனர்.

<<<<<<<>>>>>>>>

ஆப்கானிஸ்தானுக்கு வெளியே செயல்படும் பயங்கரவாத முகாம்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ நா சபைக்கான இந்தியாவின் நிரந்தர துணை பிரதிநிதி திரு டன்மையா லால் இதனை வலியுறுத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் குறித்த ஐ நா பொதுச்சபையின் சிறப்பு கூட்டத்தில் பேசிய அவர், ஐ எஸ், ஹக்கானி கட்டமைப்பு, அல்கொய்தா போன்ற பயங்கரவாத அமைப்புகள், லஸ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷே முகமது ஆகிய அமைப்புகளின் துணையுடன் ஆப்கானிஸ்தானுக்கு வெளியே பங்கரவாத நடவடிக்கைளில் ஈடுபட்டுவருவதாக குற்றம் சாட்டினார்.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக சமரசமற்ற நடவடிக்கைகள் தேவை என அவர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>>

கோவா தலைநகர் பனாஜியில் நேற்று கோலாகலமாக தொடங்கிய 48ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் இன்று இந்திய மொழி திரைப்படங்கள் திரையிடும் நிகழ்ச்சி தொடங்குகிறது, இதனை பிரபல நடிகை ஸ்ரீதேவி தொடங்கி வைக்கிறார்,

பல்வேறு இந்திய மொழிகளை சேர்ந்த 26 திரைப்படங்களும், கதை பிரிவு அல்லாத 16 திரைப்படங்களும் இந்த திரைப்படவிழாவில் திரையிட தேர்வு செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச திரைப்படவிழாவில், இந்த ஆண்டிற்கான சிறந்த ஆளுமை விருது, பிரபல இந்தி திரைப்பட நடிகர் அமிதாப்பச்சனுக்கு வழங்கப்பட உள்ளது.

இதேபோல், கனடா நாட்டின் திரைப்பட தயாரிப்பாளர் திரு **Atom Egoyan**-னுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது அளிக்கப்படுகிறது.

<<<<<<<>>>>>>>>

இலங்கை பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கே நான்கு நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

பெங்களூருவில் நாளை தொடங்கும் ஐந்தாவது உலக தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் பங்கேற்கிறார்.

புதுதில்லியில் நாளை மறுநாள் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் விரிவான பேச்சுக்கள் நடத்துகிறார்.

இந்தப் பேச்சுக்களின்போது மீனவர்கள் பிரச்னை உட்பட பல்வேறு பிரச்னைகள் இடம் பெறுமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் வெளியுறவு அமைச்சர் திருமதி. சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

<<<<<<<>>>>>>>>

ஜிம்பாப்வே அதிபர் ராபர்ட் முகாபே-யை பதவியிலிருந்து நீக்கும் விதமாக நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் கொண்டு வர அவரது சொந்த கட்சியே முடிவு செய்துள்ளது,

ஜானு-பி.ஃஎப் என்ற ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு பால் மன்குவாவனா இந்த தகவலை தெரிவித்துள்ளார், நாடாளுமன்றத்தில் முகாபே-க்கு எதிரான கண்டனதீர்மானம் இன்று கொண்டுவரப்படலாம் என அவர் கூறியுள்ளார்.

முகாபேயை பதவியிலிருந்து நீக்குவதற்கு தேவையான வாக்குகளை பெறுவதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயக மாற்றக்கட்சியை தாங்கள் அணுகி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆளும் கட்சியில் முகாபே-க்கு எதிர்ப்பு வலுத்துவரும் நிலையில் அவர் பதவி விலக மறுத்து வருவதால் அவருக்கு எதிரான கண்டன தீர்மானம் கொண்டுவர எதிர்ப்பாளர்கள் முடிவுசெய்துள்ளனர்.

<<<<<<<>>>>>>>>

மாநில சட்டமன்ற தேர்தல்களை கருத்தில் கொண்டு நாடாளுமன்ற கூட்டத்தொடர் அடிக்கடி ˙மாற்றி அமைக்கப்படுவது வழக்கம்தான் என்று மத்திய நிதியமைச்சர் திரு அருண்ஜேட்லி கூறியுள்ளார்.

அகமதாபாதில் இதனை தெரிவித்த அவர், கடந்த காங்கிரஸ் கட்சி ஆண்ட கடந்த காலங்களிலும் கூட்டத்தொடர்கள் மாற்றி அமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் ˙உரிய நேரத்தில் கூட்டத்தொடர் நடைபெறும் என்றும் அதில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினைகள் தொடர்பாக விவாதம் நடக்கும் என்றும் திரு அருண்ஜேட்லி உறுதிபட தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>>

வடகொரியா தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடாக உள்ளது என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப் கூறியுள்ளார்.

வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் இந்த பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>>

ஈராக்கில் குர்தீஸ் பகுதிகள் சுதந்திரம் பெறுவதற்காக செப்டம்பர்மாதம் நடைபெற்ற கருத்து வாக்கெடுப்பு சட்ட விரோதமானது என்று ஈராக் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>>

பிரதம மந்திரி கிராமிய ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் ஒன்பது லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>>

அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தியில் நடைபெற்று வரும் உலக மகளிர் ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த ஐந்து வீராங்கனைகள் இன்று பலபரிட்சையில் ஈடுபடுகின்றனர்.

64 கிலோ எடை பிரிவில் அஸ்ஸாமின் அன்குஷிட்டா, துருக்கியின் காக்லா அலுக்கை எதிர்த்து விளையாடுகிறார்.

57 கிலோ எடைப்பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சசி சோப்ரா தைபேயின் **lin li wei yi-**யை எதிர்கொள்கிறார்,

<<<<<<<e >>>>>>>>